பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

15 11 2025 SATURDAY 7 15 AM

ஆகாஷவாணி – செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் தொலைத்தொடர்பு துறை முன்னேப்போதும் இல்லாத வகையில் வளர்ச்சி கண்டுள்ளதாக குடியரசுத் துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. பீகார் தேர்தல் முடிவுகள் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் சிறந்த நிர்வாகத்திற்கு கிடைத்துள்ள வெற்றி என்று பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

3. வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்

4. ஆப்கானிஸ்தானில் பெண்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

5. தோஹாவில் நடைபெற்று வரும் வளரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா-ஏ அணி 148 ரன் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட் அணியை வென்றது

**>>>>><<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், நாட்டின் தொலைத்தொடர்பு துறை முன்னேப்போதும் இல்லாத வகையில் வளர்ச்சி கண்டுள்ளதாக குடியரசுத் துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய தொலைத்தொடர்பு துறையின் வைரவிழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், மத்திய அரசின் டிஜிட்டல்

அதிகாரமளித்தல் நடவடிக்கைகள் ஒவ்வொரு இந்தியரின் வாழ்க்கையிலும் மாற்றத்தை உருவாக்கியுள்ளதாக கூறினார்.

இந்த டிஜிட்டல் யுகத்தில் தொலைத்தொடர்பு துறையில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

உள் கட்டமைப்பு வசதிகள், புதுமை கண்டுபிடிப்புகள், டிஜிட்டல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் மத்திய அரசு பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா, உலக அளவில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் முன்னணிநாடாக உருவெடுத்து வருவதாக தெரிவித்தார்.

ஒவ்வொரு இந்தியரும் பயனடையும் வகையில், டிஜிட்டல் பாரத் திட்டத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

பீகார் சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை பெற்றுள்ளது.

243 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி 202 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

பிஜேபி 89 தொகுதிகளிலும் ஐக்கிய ஜனதா தளம் 85 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள LJP 19 தொகுதிகளிலும், இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா 5 தொகுதிகளிலும், ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா 4 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

இந்த தேர்தலில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணி 34 தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது.

ராஷ்ட்ரிய ஜனதா தளம் 25 தொகுதிகளிலும், காங்கிரஸ் ஆறு தொகுதிகளிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஒரு தொகுதியிலும் லெனின் கம்யூனிஸ்ட் 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

>>>>><<<<<

பீகார் தேர்தல் முடிவுகள் வளர்ச்சி அரசியலுக்கு ஆதரவாகவும், வாரிசி அரசியலை நிராகரிப்பதையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள பிஜேபி தலைமையகத்தில் நேற்று அக்கட்சி தொண்டர்களிடையே உரையாற்றிய அவர், இது பெண்களுக்கு கிடைத்துள்ள வெற்றி என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தேர்தல் நடைமுறைகள் மீது மக்கள் வைத்துள்ள வலுவான நம்பிக்கையை இது எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

ஜனநாயகத்தின் மீதும், தேர்தல் ஆணையத்தின் மீதும் நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியலில் மேற்கொள்ளப்பட்ட தீவிர திருத்தத்திற்கு மக்கள் பெருமளவு ஆதரவளித்துள்ளதாகவும், அனைத்து அரசியல் கட்சிகளும் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த தேர்தல் வெற்றி, கேரளா, தமிழ்நாடு, மேற்குவங்கம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கு பெரும் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று திரு. நரேந்திர மோடி கூறினார்.

இந்த கூட்டத்தில் பேசிய பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெ.பி. நட்டா இந்த தேர்தல் வெற்றி வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக அம்மாநில மக்கள் அளித்துள்ள ஆதரவை எடுத்துக் காட்டுகிறது என்று தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் சிறந்த நிர்வாகத்திற்கு கிடைத்துள்ள வெற்றி இது என்று அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் வெற்றிக்காக பாடுபட்ட கட்சி தொண்டர்களுக்கும், வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக திரு. ஜெ.பி. நட்டா கூறினார்.

பீகார் சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு கிடைத்த வெற்றி, கூட்டணியின் ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றி என்று ஐக்கிய ஜனதா தள தலைவரும் அம்மாநில முதலமைச்சருமான திரு. நிதிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தேசிய ஜனநாயக கூட்டணி மீது மக்கள் நம்பிக்கை வைத்து, மாபெரும் வெற்றியை அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த வெற்றிக்காக பாடுபட்ட பிரதமர் திரு. நரேந்திர மோடி, கூட்டணிக் கட்சித் தலைவர்கள் திரு. சிராக் பஸ்வான், திரு. ஜித்தன்ராம் மஞ்சி, திரு. உபேந்திர குஷ்வாஹா ஆகியோருக்கும் வாக்களித்த மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதாக திரு. நிதிஷ்குமார் கூறியுள்ளார்.

இத்தேர்தலில் எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு ஆதரவளித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவிட்டுள்ள அவர், தோல்விக்கான காரணம் குறித்து விரிவான ஆய்வு நடத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பீகார் சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள், வியப்பளிப்பதாக உள்ளது என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவிட்டுள்ள அவர், வாக்காளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சிகளின் தோல்வி குறித்து ஆய்வு செய்யப்படும் என்றும், ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

நாகாலாந்து மாநிலத்தில் புதிய தொழில்துறை பயிற்சி நிறுவனத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், கிராமப்புறங்களில் வங்கி சேவையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

முன்னதாக, நாகாலாந்து கிராம வங்கியின் சார்பில் நடமாடும் ஏடிஎம் மற்றும் குறுகிய கால வாகன கடனுதவிகளையும் அவர் வழங்கினார்.

நாடுமுழுவதும் மகளிருக்கு அதிகாரமளிக்கும் வகையில், லட்சாதிபதி சகோதரிகள் திட்டம் உத்வேகம் பெற்று வருவதாக திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

நிர்வாக நடைமுறைகளை மேம்படுத்தும் வகையில், அரசுப் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சிறந்த நிர்வாகத்திற்கான தேசிய மையத்தின் சார்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் தேவைகளை கருத்தில் கொண்டு அவற்றை நிறைவேறும் வகையில் கொள்கைகளை வகுப்பது குறித்தும், தரவுகளை சேகரிப்பது குறித்தும் இந்த முகாமில் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

தொழில்நுட்ப அடிப்படையிலான சீர்திருத்த நடவடிக்கைகளில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

ஆப்கானிஸ்தானில் பெண்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, ஐ.நா பொதுச்சபையின் செய்தி தொடர்பாளர் திரு. Stephene Dujarric வெளியிட்டுள்ள அறிக்கையில், பெண்கள் பணிக்குச் செல்லவது சுதந்திரமாக நடமாடுவது மற்றும் கல்வி பெறும் உரிமைகளை மனிதநேய அடிப்படையில் வழங்குவதற்கு அந்நாட்டு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

ஸ்வீடனின் ஸ்டாக்ஹோம் நகரில் நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர், 3 பேர் காயமடைந்தனர்.

Valhallavajen பகுதியில் உள்ள தொழில்நுட்ப நிறுவனம் அருகே அமைந்துள்ள பேருந்து நிறுத்தம் மீது, பேருந்து மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக பேருந்து ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அந்நாட்டு பிரதமர் திரு. Ulf Kristersson இரங்கல் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

சண்டிகர், மத்தியப்பிரதேசம், கிழக்கு ராஜஸ்தான், ஜார்க்கண்ட் மற்றும் உத்தரபிரதேசத்தில் அடுத்த 24 மணி நேரத்திற்கு பனிப்பொழிவு நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, கேரளா, ஆந்திர கடலோரப் பகுதிகள், தமிழகம், புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம், ராயலசீமா மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகளில் அடுத்த 3 நாட்களுக்கு இடிமின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்தமையம் கூறியுள்ளது.

இந்நிலையில். தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் காற்றின் தரம் மோசமாக உள்ளதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

வளரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா-ஏ அணி 148 ரன் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட் அணியை வென்றது.

தோஹாவில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா-ஏ அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 297 ரன் எடுத்தது.

298 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஐக்கிய அரபு எமிரேட் அணி 7 விக்கெட் இழப்புக்கு 149 ரன் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தது.

**>>>>><<<<<**

ஜப்பான் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 21-13, 21-17 என்ற செட்கணக்கில் சிங்கப்பூரின் Loh Kean Yew-ஐ வென்றார்.

**>>>>>END<<<<<**